# THE MORNING STAR.

Vol. 59. Jaffna, Thursday 2nd of March. 1899. No. 5

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE.


*RECEIPTS FOR THE MORNING STAR*

| | | |
|---|---|---|
| | 99 | |
| Batticaloa | [illegible] | 2.00 |
| | '98. | |
| Lindula | Mr. S. M. Kolasagarampilly | 2 00 |
| Moolai | [illegible] | 1.25 |
| Vannarponny | Mr. Perera | 1.00 |
| Colombo | The Hon'ble the Colonial Secretary | 1.50 |
| Panaduara | Mr. M. Seenivasagam | 2.00 |


THE CEYLON STEAMSHIP Co. Ltd.



The Company's Steamer "Lady Gordon" is appointed to sail from Jaffna to Colombo Via Paumben on

W. MATHER & SON, Agents

THE JAFFNA COMMERCIAL CORPORATION LIMITED.

Bankers and Commission Agents.

The company opens current accounts with sums of not less than Rs 100 00 and interest allowed at 2 per cent per annum on minimum monthly balances of Rs 500.00 and upwards. Fixed deposits received for 3- 6 and 12 months and interest allowed at 3, 5 and 6 per cent per annum respectively

Remittances both by Wire and Draft made to and from Colombo Colombo Bankers-National Bank of India Ltd.

Cheques and Foreign drafts and bill of exchange on the Colombo Banks cashed.

For sale at the Store Department

Grey shirtings. Mulls, Jacconettes, Chintz of different kinds, Umbrellas. Hosiery. Boots, Shoes and Harness. Waterbury watches, Printing paper, Swans Fountain Pens &c &c.

WILLIAM MATHER.
Managing Director

A HOUSE FOR SALE.

The house and premises situated in the Town at Jaffna and bounded on the east and west by the property of S. Swampillai, on the north by the property belonging to the heirs of the late Ramalingam and on the south by Beach Road. The property lies in a desirable locality facing the sea used at present as the arrack godown by the Sinhalese renter paying decent rent.

Apply to
TAMBIAH S. COOKE,
Proctor,
Jaffna.

Jaffna,
1st March '99

*Jos. N. Sandrasagra*

*Licensed Surveyor, Leveller*
*and*
*Draughtsman,*
*also*
FISCAL'S SURVEYOR
*for the Northern Province.*

Office, "ARIA LODGE," Main Street, Jaffna.


DEATH.

At Navaly, Jaffna on Tuesday the 28th Feb. 1899 Dr. Levi Spaulding aged 50.


NOTICE.

A TEACHER is needed at the Tellippala English school to teach English Middle Schoo Standards.

Candidate should either possess the Government Certificate, or be prepared to appear for examination for certificate in 1599 or 1900 as required by the Code.

Application for terms &c may be made to the Manager or the Head Master at Tellippalai.


## Local & General.

**Weather.** The dews have been very heavy and the heat in the middle of the day is intense. There is a great deal of fever about especially in Vadamiradchi where almost every house reports fever cases. The mortality in Pt. Pedro and vicinity is quite heavy. We hear that no quinine has been distributed in this section of the peninsula, why it is hard to tell.

**Harvest.** In many sections of the peninsula, the harvest is over, while in other parts reaping is still going on. The yield this year is unusually good, and farmers have every reason to rejoice.

**Girls Boarding Schools.** Both Uduvil and Udupiddi have closed for six weeks holidays. New classes will be received on examination in April. Due notice of time and conditions will be given later.

**Calcutta examinations** The examinations of the Calcutta University take place this month when a number of lads from our peninsula hope to try their chances.

**The Jaffna Railway.** The last opposition offered by a section of the planters' community headed by Mr Harcourt Skrine has vanished. His Excellency the Governor said on the night of the 22nd inst. at the farewell dinner given to Sir F. R. Saunders at the Galle face Hotel that the Secretary of State is not likely to alter the decision he has made about the Jaffna Railway *Com.*

**Clerical examination results.** Twenty-five candidates have been admitted into the second class of the clerical service, of whom five are from Jaffna namely:— Mr. Chinnatampi Kanthar from Central College. Mr. Emmanuel B. from St. Patrick's College, Mr. Kanagasakaram from Pt. Pedro, Mr. Mannel Joseph from Jaffna Town, and Mr. Valoopillai S. from Jaffna College.

**Promotion.** Mr. L. Robins, chief officer of the S. S. "Lady Havelock" has been appointed commander of the H. M. Steam tug "Hercules"

**The Egyptian Exiles.** Of the 7 exiles from Egypt where they had rebelled against the existing Government in 1882, only four are now living in Ceylon having come here in 1883. One died in 1891, another in 1894 and now one Toulba by name, has been pardoned and allowed to return to his own land.

**Director of Pub. Inst.** Mr. Burrows, Asst. Govt. Agent of the Central Province, has been appointed Director of Public Instruction. He left with his family on the 22nd inst. and will probably assume the reins of office on his return to the Island. Mr. Call retires on pension. It is rumoured also that Mr. Ashley Walker is to retire in which case there will, probably, be changes in the staff of Inspectors.

**Missionaries.** Rev. E. and Mrs. Weaver of Kalmunai left the Island for England last week. and Rev. and Mrs. Leese take their places, Rev. J. and Mrs. West of Batticaloa are to leave in ten days or so on furlough and Rev. A. E. and Mrs. Restarick take their places. The latter are expecting to leave Pt. Pedro this week. Rev. G. Robson comes to Pt. Pedro.

**Manippai Telegraphic Office** We learn on good authority the telegraph office at Manepay will be opened from the beginning of this month. *Com.*

**Karadivoe Riot Cases.** The criminal cases that arose by the impudence of some of the Vellalas preventing some fishers from fishing in the Punnalai sea, were terminated in the District Court in its criminal jurisdiction on the 22nd ultimo. The judge gave an exemplary punnishment and the accused men in all were fined Rs.960. *Com.*

**The Jaffna Sessions.** The S. S. "Lady Gordon" arrived at the Jaffna Port on Sunday last, with Supreme Court staff who were landed towards the evening. Mr. Justice Withers opened the first Jaffna Sessions for the year with the usual police honours, at 11 a. m. the next day. Mr. Swan acts as the Registrar and E. H. Prins prosecutes. Mr. Ramalingam the newly appointed Tamil Interpreter of the Court acts as interpreter. The Sessions will be short there being only eight cases on the roll for trial. The Jaffna Court supplied six and the Kaits and Mallakam Courts each one. There are two thefts from Jaffna and one in each of the following offences—murder, house breaking by night, breach of trust and mischief by fire to a dwelling house. The one from Mallakam is for grievous hurt and the one from Kaits is for preferring a false charge. *Com.*

**Baddabedde Case.** A sensational case for the estate called "Baddabeddi" was fought out in the District Court of Colombo between Mr. Siri Kanda and his wife as plaintiff and Nannitampi Mudaliar and Mr. Senathirajah Advocate as Defendants. The first Plaintiff is the son of Mr. P. Coomaraswamy the late Tamil Member of the Council and the 1st Defendant is the father-in-law of the Solicitor General Mr. P. Ramanathan. The second Defendant filed separate answers. Mr. Felix Dias who heard the case as District Judge entered judgment for Plaintiffs, covering foolscap sheets of 60 pages. The 2nd Defendant Mr. Senathirajah has appealed against the Judgment of the District Judge—the appeal covering 26 type written foolscap pages. The appeal will be soon heard, and it is surmised that application will be made to the judges to decide on some points affecting the character of some of the parties and their advisers, about whom the District Judge spoke in severe language. *Com*

**Old Park.** The *At Home* given by Mr. and Mrs. Ievers passed off very pleasantly on the 18th ult. A large number were present and suitable entertainment was provided for all classes of people.

**Town Hall.** A preliminary meeting was held day before yesterday to consider the desirability of erecting a public Town Hall. The Government Agent Mr. R. W. Ievers presided. Many prominent men are interested in this scheme.

**The Legislative Council.** The Council met on the 21st. ult. and spent most of its time in listening to questions and their answers, in which our Tamil representative, Dr. Rockwood, took a prominent part. The Doctor was especially severe on the medical department and in view of recent facts his criticisms were well taken. It has been said that the Government has supplied the Headmen with quinine to distribute among the people. If so the amount supplied must have been altogether inadequate for as far as we can learn persons are clamoring for quinine and are not getting it. We know of one person who has been selling to the few who come to his house, on an average of half an ounze a day for the pase fortnight. Manepay and Inuvil hospitals and we presumt the F. I. N. S. institution in Jaffna as well have been crowded with patients. Fever has been increasing and many deaths are reported. In one village school in the Pt. Pedro circuit 16 children have died in the past month. In another school in the Nunavil circuit 5 succumbed to the disease in a fortnight. We have never known a worse season for fever and we hope the authorities are alive to the situation.

**Lady Gordon.** The steamer after landing the Supreme Court party on Sunday left for Colombo the next evening. It left Colombo north about again, yesterday and leaves with the Supreme Court tomorrow for Trincomalie.

**Rev. F. B. Meyer.** This noted preacher from Christ church, Westminister accompanied by Mrs. Meyer arrived in Colombo on the 24th ult. He commence his mission on the following day and closes today. We feel sure that the meetings have been successsful, and that great good has been done. Mr Geo. S. Eddy of India has been with him.

**The late Dr. J. Bates.** We are exceedingly sorry to record the death of Mr. Bates of the Jaffna F. N. S. Hospital which took place on Saturday the 25th ultimo at his residence at Jaffna. The deceased served at the Hospital for about 26 years without interruption. He was a genial officer and very much liked by all. A week before his death Mr. Bates had an attack of fever which took a serious turn brought on delirium and prostration some time before his death. The funeral was on the next day at 4.30 p.m. It was largely attended showing the esteem the deceased was held in by the public. Services were held in the house, Wesley chapel and at the grave. Much sympathy is felt for the widow and the relations who bemoan the loss.

**Tax Exemption.** The Government Agent has been on duty last week to the islands and the Vadamaratchy Division to exempt from poll-tax persons deserving exemption. *Com.*

**Medical.** The Senior Medical Officer. Dr. Thornhill has been laid up for some days with inflamation of the liver. Dr. Santiago is attending to his duties in addition to his own. Dr. T. B. Scott was called in on consultation and decided that the best thing to be done was to send Dr. Thornhill to Colombo where he would have the best medical advice and be carefully nursed.

**The Court at Delft.** Mr. Woutersz was expected to leave Kaits on his annual tour to Delft this week. He will be away for a month.

**Service.** His Excellency the Governor will leave the Island on leave, on the 17th inst. Sir E. N. Walker will officiate as Lieutenant Governor. The Hon'ble W. T. Taylor will act as Colonial Secretary. Sir F. R. Saunders has retired from the service and the Hon'ble L. F. Lee has been appointed as the Treasurer in his place. The Hon'ble H. L. Moysey succeeds Mr. Lee at the Customs. Mr. King N. W. Province retires and Mr. Mason succeeds him.

**Mr Samuel Lee.** The principal of the "City College" Colombo, is at present in Jaffna planning to open a "Caste School" for boys and girls of the low caste. He has hired the corner house at the 1st cross street, Jaffna and has started his work there on a small scale. *Com*

**Graduating Tamil Scholars** On Saturday the 25th ult. exercises to graduate three Tamil scholars were held at the Navalar Tamil school at Vannarponnai. Medals were given to the graduates. Mr C. W. Catheravaloopillai presided and stirring speeches were made by Messrs Nevens Selvaduraipillai, K. C. Kadirkamar, Pundit Kovindapillai, Proctor Kathiravaloe and others. *Com*

**Ceylon Technical College.** An examination for admission of students to the above school will be held both in Colombo and Jaffna on the 22nd inst. Applications for admission are obtainable at the Jaffna Kachcheri for students who will appear in Jaffna. There are upwards of forty vacancies in the Department and those who are admitted and go through the course will get appointments on the Railway, Post Office and other desirable work under the Government. *Com.*

**Obituary.** Dr. Levi Spaulding of Manipay south died yesterday at his home. He was one of Dr. Green's students, a classmate of Dr. L. S. Strong Modr., Dr. Wm. Paul, Dr C. T. Mills and others. For many years he was in the employment of the Government in the Central Province, and only retired from active service a few years ago. Of the 12 members of his class only 5 are now living, viz. Dr. Wm. Paul and Dr. Sivapragasam of Jaffna, Dr. C. T. Mills of Manepay. Dr. Hitchcock of Uduvil, and Dr. Nathaniel of Paumben. The friends have our sympathy in their loss.

**Mr. P. Hallock.** We learn that Mr. Ponnusamy Hallock, second son of Mr. G. H. Hallock Modr. has been appointed Sub-Collector of the port at Valvettiturai.

**Supreme Court.** A report of the sittings of the Court will be given in our next issue. We learn as we go to press that the man from Manepay charged with Arson has been sentenced to 7 years imprisonment.

# உதயதாரகை.

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும், பாவமோ எந்தச் சனங்களுக்கும் இகழ்ச்சி.

௫௯ம் புத்தகம்.] யாழ்ப்பாணம், ௧௮௯௯ம் ஹூ பங்குனி மீ ௨௯ வியாழக்கிழமை. [சங்கியை, ௫



THE JAFFNA COMMERCIAL CORPORATION LIMITED.

## யாழ்ப்பாண வியாபார சமுதாயம்.

இச்சமுதாயத்திற் பின்னுஞ்சொல்லப்படுஞ்சாமான்கள் புதிதாய் அழைக்கப்பட்டு இப்போ விற்பனவுக்கிருக்கின்றன.

பட்டுச்சேலைகள்.
சரிகைச்சேலைகள்.
பலதிறமானநடபடிச்சேலைகள்.
சிற்றுடைகள்.
விவாக உடுப்புக்கேற்ற ரோசாப்பூ, வெள்ளிநிறங்களுள்ள பட்டுகள்.
நேர்த்தியான பலவித வேல்வேற்.
பலதினுசான கோடிமல், சலவைமல், காரிக்கன்.
மிகவும் நேர்த்தியான பலவகைச் 'சீத்தை'ப் பிடவைகள்.
வெள்ளை 'ஒறகிஸ்' சீலை.
குடைகள், சப்பாத்து, கால்மேசு, குதிரைஉபேப்பு.
அச்சியந்திரத்துக்கடுத்த கடதாசி, மை.
எழுத்துமை, பேனை, பென்சில் Fountain பேனை.
'காற்சட்டை, கோற்று'களுக்கேற்ற கன்னனூர்ச்சீலைகள்.

### புத்தக விளம்பரம்.

Works by the late Mr. J. R. Arnold.

இப்பத்திரிகைக்கு ஏறக்குறைய நாற்பது வருஷங்களாகத் தமிழ்ப்பத்திராதிபராயிருந்து காலஞ்சென்ற ஸ்ரீ மத். அ. சதாசிவம்பிள்ளை அவர்களால் (J. R. Arnold) இயற்றப்பட்டு நவமாய்ப் பிரசுரிக்கப்பட்ட பின்வரும் புத்தகங்கள் விற்பனவுக்கு ஆயத்தமாயிருக்கின்றன.

| | | |
|---|---|---|
| பஞ்சரத்தினம் | விலை சதம், | ௨௫ |
| ஞானவெண்பா | " | ௧௨ |
| சுகமரணபீஷ்டம் | " | ௧௮ |
| தபாற்செலவு | " | ௨ |

முன் பிரசுரிக்கப்பட்டவற்றுள் இப்போது விற்கப்படுவன.

| | | | |
|---|---|---|---|
| பாவலர்சரித்திரதீபகம் | விலை, | ரூ. ௧ ச, | ௫0 |
| நன்னெறிக்கதாசங்கிரகம் | " | " ௧ " | ௧௨ |
| குடும்பதருப்பணம் | " | " | ௫0 |
| இல்லறகொண்டி | " | " | ௩0 |
| கீர்த்தனசங்கிரகம் | " | " | ௨௫ |
| வெல்லையந்தாதி | " | " | ௧0 |
| இவற்றிற்குத் தபாற்செலவு முறையே | | " | ௪0-௫ |

௨-௨-௨-௨. பிரியமுள்ளோர் கிரயமனுப்பிப்பெற்றுக்கொள்க.

S. T. Arnold,
Proctor, Manippay.

### ஐந்து ரூபாய் உபகாரம்.

இந்த மாதம் ௧௯ ந் திகதி எனது வீட்டிலிருந்து ஒரு பசுக் காணமற்போய்விட்டது. நிறம் கருஞ்சிவப்பு அல்லது கழுதி. மடியிலும் முன்காலிலிடுக்குகளுக்குள்ளும் வெள்ளை, கொடிச்சிவால், மொட்டைப் பனிச்சி.

குறி வயிற்றில் ஐகமும், ம வும், கன்னத்தில் புள்ளடி, முன்னிரண்டுகன்றீன்றது குணம் வெருளி.

இதையறிந்தவர்கள் பத்திரிகை மனேச்சருக்கு அல்லது எனக்கு அறிவிக்கும்படி தாழ்மையாய் வேண்டுகிறேன்.

யோ. மருதாத்தை.

சுவாலி, ௧௮௯௯ மாசி ௨௨.



## உதயதாரகை.

௧௮௯௯ம் ஹூ பங்குனி மீ ௨௯.


### தோட்டத்துரைமார் கூட்டமும் வடமாகாணப் புகைவீதியும்

### The Planters Association, and the Northern Railway.

இங்கிலந்திலே உபகாரச்சம்பளத்தோடிளைப்பாறுபவர்களும், பெரும்முதலிட்டு இலங்கையிலே தேயிலைச்செய்கையாதியன நடப்பிப்பவர்களுமாகிய சிலர் ஒருங்குசேர்ந்து, முன் இலங்கைத்தேசாதிபதியாயிருந்திளைப்பாறுஞ் சேர் ஆதர்கோடனைத் தலைமையாக்கி இலங்கைச்சங்கமெனவொன்று கூடி வடமாகாணப் புகைவீதிக் கெதிரிடைகூறினரெனக் கேள்விப்பட்ட இலங்கைவாசிகள்பலர் வடமாகாணப் புகைவீதிக்காரியம் புகையாய்ப்போகுமோவென ஐயங்கொண்டனர். இங்கிலந்திலுள்ள இலங்கைச் சங்கத்தார், இலங்கையிலுள்ள தோட்டத்துரைமாரின் தீர்மானத்தை அறிந்தபின்பே இராசமாலிகிதர் மெஸ். சேம்பளேன் அவர்களைக் காண நிர்ணயித்திருந்தனராகையால், இலங்கைத்தோட்டத்துரைமார் கூட்டத்தின் தீர்ப்பை வடமாகாணப்புகைவீதிக்குச் சார்பானோர் எதிரிடையானோராகிய இருபகுதியாரு மதியாவலோடெதிர் பார்த்திருந்தனர். இலங்கையின் பற்பல பகுதிகளிலுமுள்ள தோட்டத்துரைமார் சென்றமாதம் ௩௰ ந் திகதி கண்டிமாநகரிற்கூடினர். முன்னொருபோதும் இவ்வளவு திரளான துரைமார் கூடி இவ்வளவு அனலான கூட்டம் வைத்திலராம்.

இங்கிலந்திலே அருட்சியை யுண்டாக்கிய மெஸ். சார்க்கோட் ஸ்கிறையின் என்பவரே இலங்கையிலும் பத்திரிகைகள்மூலமாயும், கண்டு சம்பாஷிப்பதினாலும் பெரும் அருட்சியை யுண்டாக்கினர். குறித்த பதினேழாந் திகதி ஐந்துமணிவரையில் மெஸ். லேன் அக்கிராசனராயுட்கார, தோட்டத்துரைமார் பிரதிநிதி மெஸ். காமெல், வர்த்தகசங்கத்தலைவர் மெஸ். பிக் ஆதியோர் முதன்மையாய் நின்று கூட்டத்தை நடத்தினர். முதலாவதாய் மெஸ். ஸ்கிறையினெழுந்து சேர் ஆதர்கோடனையும் இலங்கைச் சங்கத்தைச்சேர்ந்த மற்றுமங்கத்தவர்களையும் பெருமறிவாளிகளும் அனுபவசாலிகளுமென வியந்து, வடக்கைநோக்கிப் புகைவீதி திறத்தல் மிகவும் மதிகேடான செய்கையென்றும், அது இலங்கையரசாட்சியைப் பெருங்கடனுக்குட்படுத்துமென்றும், அதனாற் தேயிலைச்செய்கை பட்டுப்போமென்றும் அதி வாசாலமாய்ப் பேசியுட்கார, மெஸ். யோன் மெக்டனல்ட் என்பவர் அனுவதித்தார். உடனே மெஸ். மெல்வில் உகைற் என்பவர் எழுந்து முந்தினோரின் பேச்சுகளை மறுத்து வடக்கை நோக்கிப் புகைவீதி திறக்கப்படுதல் நியாயமானசெய்கையென்றும், அதற்குச்சார்பாய் ஒருவருடத்துக்கு முன் தாம்பண்ணிய தீர்மானததை யிக் கூட்டத்திலும் நிலைநிறுத்துவதேசரியென்றும், புகைவீதிக்கென்று இதுவரைக்கும் தீர்மானித்ததுபோக இனிமேல் மிஞ்சும் பணத்தை யிதற்காயெடுத்தல் கூடாதென்று மாத்திரம் இராசமாலிகிதர்க்கோர் விண்ணப்பமனுப்பத் தாமும் பிரிபகாரரென்றும் வெகு சாதுரியமாயும் நியாயசாதனையாயும் பேசிமுடிக்க, மெஸ். கார்க்கோட் ஸ்கிறையினுடைய நிர்ணயத்துக்காய் ௧௪ பேரும் மெஸ். மெல்வில் உகைற்றின் நிர்ணயத்துக்காய் ௩௩ பேருங் கையுயர்த்தினர். ஐயகோ! கார்க்கோட் ஸ்கிறையினதும் இலங்கைச்சங்கத்தவர்களதும் மெடுப்புத் தோட்டத்துரைமார்கூட்டத்தி லொப்பேறாதுபோயிற்று.

தோட்டத்துரைமார் கூட்டத்தின் தீர்ப்பை யெதிர்நோக்கியிருந்த இலங்கைச்சங்கத்தவரினி யென்செய்வரோ? சேர் ஆதர்கோடனும் கூட்டாளிகளும் இராசமாலிகிதர் மெஸ். சேம்பளேனைக் காணுமுவிடார்கள். கண்டுமென்ன? சிலநாட்களின் முன் நடைபெற்ற விருந்தொன்றில், வடமாகாணப் புகைவீதிக்காரியந் தீர்மானமானபின் எதிரிடைகள் கூறுவதில் யாதும் பயனில்லையென்றும், மெஸ். சேம்பளேன் தாம் பண்ணிய தீர்மானத்தை மாற்றமாட்டாரென்றுந் தேசாதிபதி சேர் யோசேவ் றிட்சுவே கூறினர். சேர் ஆதர்கோடனும் கூட்டாளிகளும் மெஸ். சேம்பளேனைக்காண இரண்டுநாளுக்கு முந்தி அவரைக் கண்டு இலங்கைச் சங்கத்தவர்களின் மதியீனத்தை யுணர்த்தச் சிலர் தீர்மானித்திருக்கின்றனரெனப் பத்திரிகையொன்று கூறுகின்றது. ஆகவே மெஸ். சேம்பளேன் இலங்கைச்சங்கத்தவராலேய்க்கப்படமாட்டாரென்பது நிச்சயம்.

### யாழ்ப்பாணம்.

காலநிலை.—Weather.—பகலில் வெயில் மிகக்கோமாய் விழுகின்றமையாலும் இரவிற் பனி குறைவானமையாலும் புழுக்கமும் அகோரமுந் துவங்கிவிட்டது. காய்ச்சல் சின்னமுத்து வயிற்றுளைவாதியநோய்களின்னுமிருக்கின்றன.

ஏசண்டரினுபசாணை.—At Home.—வடமாகாண ஏசண்டர் மெஸ். ஐவேஷ உம் அவர் பாரியாரும் சென்றமாதம் பதினெட்டாந்திகதி சாயந்தரம் யாழ்ப்பாணத்தின் சுதேச பிரபுக்களை அழைத்து உபசாணை செய்தனர். நாலுமணிவரையில், காலஞ்சென்ற டைக் மன்னரால் ஸ்தாபிக்கப்பட்டதும் கொடிகள் தோரணங்களாலலங்கரிக்கப்பட்டிருந்ததுமான கச்சேரித்தோட்டம் பற்பல திசைகளிலுமிருந்து வந்தோரானிரம்பிற்று. நான்கு பிரிவாய்க் கூடாரங்களடித்து வைக்கப்பட்டிருந்த, பண்ணிகாரவகைகள், இனிப்புகள், கோப்பி, தேநீர், சோடா, லெமொனெட், ஆதியவைகளை அழைக்கப்பட்டோர் தத்தம் மனங்கொண்டவாறு அருந்திக் களித்தனர். பண்ணிகாரங்கள் தேநீராதியன தட்டங்களிற் கொண்டுதிரிந்தும் வழங்கப்பட்டன. மத்தளம், தவில், வீணை, நாகசுரம், உடுக்கு, சங்குநாதம்ஆதிய வாத்தியவகைகளொருபக்கம், வவனியாவிலிருந்துவந்தசிங்களவரின் கூத்துகள்வேறோர்பக்கம், சோனகரின் சிலம்படிகள் பின்னோர்பக்கமாய் வந்தோரின் காதுகளையுங் கண்களையுங் கவர்ந்தன. ஏசண்டரும் பாரியாருஞ் சுற்றிச் சென்று எல்லோரையுஞ் சந்தித்து மகிழ்வித்தனர். வந்திருந்தாரெல்லோரும் தாம் கண்டு கேட்டு ருசித்துச் சம்பாஷித்தவைகளால் மகிழ்ச்சியடைந்து ஆறுமணிவரையிற் தம்பதி நோக்கினர்.

மிஷன் புதினம்.—Mission News.—யாழ்ப்பாண அமரிக்கமிசியோன் ஊழியத்திற்காய்ச் சமுசாரியான ஓர் புதிய மிஷனரியை அனுப்புவதோடு தெல்லிப்பழைப் போதனைகைத்தொழிற்சாலைக்காய் இஞ்சினீர்வேலைபழகிய மெஸ். டிக்சன் என்னும் வேறொருவரையும் அனுப்பத் தீர்மானமாயிருக்கின்றதென்றும், கனம். சிமித் ஐயரவர்களைப் பரிகரிக்கும் வைத்தியர் மேலுந் தைரியவார்த்தை கூறுகின்றாரென்றுஞ் சில தினங்களின்முன் அமரிக்காவிலிருந்து அவுலந்துபண்டிதரனுப்பிய காகிதத்தால் விளங்குகின்றது.

கிளேறிக்கல்.—Clerical Ex.—சென்ற கார்த்திகைமாதம் நடைபெற்ற கிளேறிக்கல் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திலிருந்துசென்றோருள், சேன் பற்றிறிக்கல்லூரியிலிருந்து மெஸ். வி. இம்மானுவேல், என்பவரும், மத்தியகல்லூரியிலிருந்து மெஸ். சின்னத்தம்பியென்பவரும், யாழ்ப்பாணக்கல்லூரியிலிருந்து மெஸ். வேலுப்பிள்ளையென்பவரும், பருத்தித்துறையிலிருந்து மெஸ். கனகசேகரம் என்பவருஞ் சித்தியெய்தினர்.

மட்டக்களப்பிற் பரீட்சிக்கப்பட்டவரும் இனஸ்பெக்டர் மனுவேல் அவர்களின் மகனுமாகிய மெஸ். யோசேவ் மனுவேலுஞ் சித்தியெய்தினர்.

தமிழ்ச்சங்கம்.—Tamil Sangam.—யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணையிலே தமிழ்க்கல்வியை விருத்திபண்ணும்நோக்கமாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கு மிச்சங்கத்தைச் சேர்ந்தோர் சென்ற ௨௫ ந் திகதி வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிற் கூடித தாம் நடத்திய பரீட்சையிற் சித்திபெற்ற மாணவர்க்குப் பட்டமும் பரிசுமளித்தனர். தாமரை மதுவைத் தவளையறியாத்தன்மையாய்த் தமிழ்ப்பாஷையிலுள்ள பொக்கிஷங்களை அசட்டைசெய்து தள்ளிவிட்டு எல்லாரும் இங்கிலிஷ் இங்கிலிஷ் என ஓடித்திரியுமிக்காலத்திலே தமிழ்ப்படிப்பைவிர்த்தியாக்க முயற்சிசெய்யுஞ்சங்கத்தாரினெடுப்பை மிகவும் மெய்ச்சுகின்றோம். அழைப்புப்பத்திரங் கிடைத்தும் நாம் சமுகங்கொடுக்க வசதிவாய்க்காததையிட்டு மிகக் கவலையுற்றோம்.

வல்வை வைத்தியசாலை.—Valvai Medical Hall.—ஊரவர்களின்நன்மைக்காய் வல்வெட்டித்துறையிலே மெஸ. ஏ. எஸ். சந்திரசேகரவைத்தியரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் வைத்தியசாலையில் விற்கப்படுமோர் விசேஷமருந்தெண்ணெய்யைப்பற்றிப் புகழ்ந்து பாடப்பட்ட சில பாக்கள் நமக்கனுப்பப்பட்டன. இடமின்மையாற் பாக்களை நிறுத்துகின்றோமாயினும் வைத்தியசாலையை நல்லுபகாரிகள் தைரியப்படுத்துவுகின்றோம். மதுரையிலிருக்குமோர்புத்தகவியாபாரி சில வைத்தியநூற்களுபகரித்திருக்கின்றனராம்.

மரணம்.—Obituary.—சாவகச்சேரியிலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கிறீன் தருமவைத்தியசாலையின் டாக்குத்தரான மெஸ். அல்விறெற் அன்டேஷன் அவர்களின் ஏகசுதனான சாமுவேல் அன்டேஷன் என்னும் எட்டுவயசுப்பிள்ளை சென்றமாதம் ௧௯ ந் திகதி மரித்துப்போனசெய்தி பெற்றோர் சகோதரங்கள் சுற்றமித்திரர்க்குமாத்திரமன்று அப்பாலனை அறிந்த எல்லோர்க்குந் துயரத்தைக்கொடுத்தது. எட்டுவயசுப் பாலனாயினும் வளர்ந்தவர்களுக்குரிய ஞானமும், கெட்டித்தனமும், மார்க்க பயபத்தியுமுடையனென்பது அறிந்தயாவருங் கூறுஞ் சாட்சி. பல பெண் பிள்ளைகளுக்கிடையி லரிய ரத்தினமாயுதித்த பாலனையிழந்து கலங்கும் பெற்றோர் சகோதரங்களோடு நாமுமனுதாபப்படுகின்றோம். சின்னமுத்தோடடுத்த வயிற்றுளைவே மரணகாரணம்.

யாழ்ப்பாண ஆபத்துக்குதவிவைத்தியசாலையில் நெடுங்காலம் டிஸ்பென்சர் வேலையாயிருந்த மெஸ். பேற்ஸ் சபாபதிப்பிள்ளை சென்ற சனிக்கிழமை காய்ச்சல் நோயாற் காலஞ்சென்றனரெனக் கேள்விப்படுவதுமின்னுமல்முழுங்காமல் இடியிடித்தாற்போ லிருக்கின்றது. ஐயையோ! ஒருவர்பின்னொருவராய் முன் மெஸ். கந்தவனத்தையும், இப்போது மெஸ். சபாபதிப்பிள்ளையையுமிழப்பது வைத்தியசாலைக்குப் பெரு நட்டமே. மெஸ். சபாபதிப்பிள்ளை தம் சுற்றத்தவர்க்கு ஓர் சிரசாய் விளங்கியவர். பர்த்தாவையிழந்த மனைவியோடும் மற்றுஞ் சுற்றத்தவரோடும் நாமும் கவலையுறுகின்றோம்.

மதுரைப்பகுதியிற் பொலீஸ இன்ஸ்பெக்றராயிருக்கும் மெஸ். வீராசாமிப்பிள்ளையின் மகனான இரண்டு வயதுப் பிள்ளையும் வட்டுக்கோட்டையிலே போனாராகிய மெஸ். கிங்ஸ்பரி ஆசிரியரின் வீட்டிலே காலஞ்சென்றுபோனது துக்கம். கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தாரென ஆறுதலடைவதே ஞானம்.

சுப்பிரீங்கோடு.—Supreme Court.—முன்குறித்தபடியே சென்ற திங்கட்கிழமை துவக்கம் யாழ்ப்பாணச் சுப்பிரீங்கோட்டுவிசாரணை நடைபெறுகின்றது. மூன்றும் நீதிபதி மெஸ். உவிதேஷ் நீதாசனத்திருக்க மெஸ. பிறின்ஸ் முடிக்குரிய நியாயதுரந்தரராகவும், மெஸ். விஜயசேகர அந்தரங்க லிகிதராகவும், மெஸ். சுவோன் றிஜிஸ்திரராகவும், மெசேஷ் இராமலிங்கம் சில்வா என்பவர்கள் துவிபாஷிகராகவும் விளக்கம் நடைபெறுகின்றது.

திங்கட்கிழமை இரு களவு வழக்குகள் விளக்கப்பட்டன. இரண்டிலும் அருணன் என்றுமொருவனே எதிரி இரு வழக்குகளிலும் நிர்அபராதியெனக் காணப்பட்டு விடுதலைபெற்றனன்.

செவ்வாய்க்கிழமை மானிப்பாயில் கீடுசுட்ட வழக்கு விளக்கப்பட்டது. இதில் முந்திய சுப்பிரீங்கோட்டுக்கு அகப்படாதிருந்த தனியசிங்கமென்பவர் எதிரி.

பூரிமாரிவரைக் குற்றவாளியெனத் தீர்க்க நீதிபதி ஏ
ழுவருடக் கடும் மறியலூழியம் விதித்தனர்.

புதன்கிழமை மானிப்பாய்வாசரான கோவிந்தர் ச
பாபதியென்பவர் வியாபார சமுதாயத்துக்குரிய காசு
௲௦௦ ரூபாயைப் பொதுக்கினுரென்னுங் குற்றச்சாட்
டில் விளங்கப்பட்டார். யூரிமாரவரைக் குற்றவாளி
யெனத்தீர்த்தும் முடிவுகூறுதல் இன்றைக்கென வை
க்கப்பட்டது.

**உத்தியோகமாற்றம்.—Office Changes.**—திருக்
கோணமலைக்கச்சேரியிலே மெஸ். நிக்கலசுடையஇட
த்துக்கு நியமிக்கப்பட்ட மெஸ். சபாரத்தினம் அவ்வு
யர்ச்சியைக் கருதாது யாழ்ப்பாணக்கச்சேரியிலேயே
யிருக்கக் கேட்டுக்கொண்டமையால், துவிபாஷிதருங்
ளாக்குமாயிருந்த மெஸ். பிலிப்ஸ் அவ்விடத்துக்கு
யர்த்தப்பட, அவருடைய இடத்தை நிரப்பும்படி வவ
னியாக்கச்சேரியிற் துவிபாஷிதராயிருந்த மெஸ. பார்
திருக்கோணமலைக்கு மாற்றப்பட்டனர்.

**தீபஸ்தம்பம்.—Light House.**—வடகரையிலிரு
ந்தோடிவருமுருக்களுக்கு முதன்முதற் தோற்றுமிட
ங்களுட்காரைதீவிலுள்ளகோவளமுனையுமொன்றென்
பது பலரறிந்த விஷயம். யாழ்ப்பாணத்தைத் தரி
சித்தோடுங் கப்பல்களுக் கிதுவோர் விசேஷித்தவிலக்
காகையால் அவ்விடத்திலோர்தீபம் ஸதாபிக்கப்படுத
லத்தியமென அரசாட்சியாருணர்ந்து ஓர் தீபஸ்தம்ப
மெழுப்பி யிந்தமாசத்துவக்கததோடு தீபமுமேற்றியி
ருக்கின்றனர். அதன் கண்காணிப்புத்தியோகஸ்தரா
ய்க் காரைதீவுவாசரான மெஸ். இராமனுதர் தம்பை
யா அரசாட்சியாரால் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.
இவர் யாழ்ப்பாணக்கல்லூரிப் பழயமாணவரிலொரு
வர்.

**ஆட்கள்.—Personal.**—மானிப்பாய் ஆசுபத்திரி
த்தலைவர் கனம் டக்றர் ஸ்கொற் ஐயர் அவர்கள் சுக
ம்நோக்கி ஊரிக்காடு சென்றிருக்கின்றனர். ஒரு மா
தத்துக்கு அங்கே வசிப்பர்.

வடமாகாணச் சிரேட்டவைத்தியர் டக்தர் தோண்
கில் மிகக் கடுமையான சுரநோய்வாய்ப்பட்டிருக்கின்
றனர். டக்றர் ஸ்கொற் ஆதியோர் வைத்தியம் நடத்
துகின்றனர். உதவிவைத்தியரான டக்றர்சந்தியாகே
சிரேட்டவைத்தியரின் கடமைகளைப் பார்க்கின்றனர்.

கள்ளச்சாதனங்காட்டிக் கள்ளச்சத்தியஞ்செய்தா
ரென அரசாட்சியாராற்குற்றஞ்சுமத்தப்பட்ட மெஸ்.
ராசய்யா சலோமோனுடையவழக்கும் சுப்பிரீங்கோ
ட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டிருக்கிறதாய்க் கேள்வி.
விளக்கம் மட்டக்களப்பில் நடக்குமாம்.

**அல்லைப்பிட்டி உடையார்.—Odiar of Allepiddy.**—தம் பிள்ளைகளைப் படிப்பிக்கும் நோக்கமாய்ச்
சென்ற நான்குவருடங்களாய் யாழ்ப்பாணச்சீதாரிபி
ல வசித்தவரும் உவெஸ்லியன்மிஷன் சபையைச்சே
ர்ந்தவருமாகிய மெஸ். விசுவனுதர் கணபதிப்பிள்ளை
யென்பவர் அல்லைப்பிட்டி, மண்டைதீவு, மண்கும்பா
னென்னும் பகுதிகளிலுடையாராக நியமிக்கப்பட்ட
ரென அறிவது சந்தோஷம். இவர் இப்போது பிள்
ளைகளைப் பள்ளிக்கூடத்திலொழுங்குபண்ணி விட்டுவி
ட்டுத் தமது உத்தியோகஸ்தானஞ்சென்று வசிக்கின்
றார். தகுநதஇடத்திற்குத் தகுந்ததெரிவுசெய்தவரா
கிய தீவுப்பகுதி மணியகாரன் மெஸ். முத்தையாபிள்
ளையின் போக்கு மிகவும் மெய்ச்சப்படத்தக்கது.

## இலங்கை.

**சட்டநிருபணசபை.—Legislative Council.**—
பின்போடப்பட்ட சட்டநிருபணசபையானது சென்
ற உகந் திகதி ஆரம்பமாயிற்று. முதற்கூட்டத்தில்
கௌரவ டக்தர் ருெக்குவுட் அவர்கள் இலங்கை அர
சாட்சி வைத்தியப்பகுதியைப்பற்றிப் பொறித்த கே
ள்விகளே தர்க்கிக்கப்பட்டன. தேசாதிபதி அந்த
நாள் நுவரெலிக்குச் சென்றனர். சங்கத்தை நடத்
துவதற்காய் இன்றைக்குக் கொழும்பு வநதசேர்வர்.

விசதியாகர்த்தர்.—உத்தியோகத்தா லீவைப்பாலும்
வித்தியாகர்த்தர் மெஸ. கல்வினிடத்துக்கு நுவரெலி
யினுதவிஏசண்டரும் நீதவானுமாயிருந்த மெஸ. எஸ்.
எம். பரோஸ் எம். ஏ நிலையான நியமனம்பெற்றனர்.
இவர் இப்போது லீவிற்செல்கின்றமையால் திரும்பி
வருமட்டும் மெஸ். காவாட்டே அயிட்டிங்காய்க் கட
மைபார்ப்பர்.

**தனுதிபதி.—Treasurer**—இளைப்பாறும் நோக்க
மாய் மூன்றுமாத லீவிற்செல்லும் சேர் பிரதரிக் சோ
ண்டேஸ் இன் இடத்தில் மெஸ். லீ நியமனமாகிக் கட
மைபார்க்கின்றனர். மெஸ. மோயிஸி ரேகுத்தலைவ
ராய் நியமனம்பெற்று வேலை யொப்புக்கொண்டனர்.
மெஸ், பிஷர் லீவிற்செல்லும் மேல்மாகாண ஏசண்
